**பலான்கொடை நகர சபை - 2022**

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலான்கொடை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான பலான்கொடை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயமொன்று வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்குரிய அட்டுறு செலவுகள் ரூபா 1,315,430 தொகை மற்றும் கொம்போஸ்ட் உர இருப்பின் மதிப்பு கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | அட்டுறு செலவுகள் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்று தயாரிக்கும் போது சீர் செய்யப்படுமெனவும் உற்பத்திக் கணக்கொண்டு தயாரிக்கப்படாமையால், இறுதி இருப்பு கணக்கிடப்படாது என்பதாக. | இது சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூ.504,274,940க்கான 04 கணக்கு விடயங்களுக்காக விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த ஆண்டு இறுதிக்குள் உப பதிவேடுகள சமர்ப்பிக்க முடியும் என்பதாக. | விரிவான உப பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **இணக்கமின்மை** | **சபையின் கருத்துரை** | **சிபார்சு** |
|---|---|---|
| 2021 செப்டம்பர் 29ஆம் திகதிய 01/2021 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.5 பிரிவின் பிரகாரம், கூட்டு மொத்தம் ரூபா 6,841,637ஆன 10 தொழில்கள் அவை உரிய அதிகார எல்லைகளுக்கு வெளியே சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | வேறு ஒரு பகுதிக்கு சமூக அடிப்படையிலான அமைப்பொன்றிற்கு உரிய தொழிலை பெற்றுக் கொடுப்பதற்கு ஆட்சேபனையொன்று இல்லை என்பதாக உரிய தொழில் அமைந்துள்ள பகுதியின் சமூக அடிப்படையிலான அமைப்பு தெரிவித்துள்ளதாக. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கைகள்எடுக்கப்பட வேண்டும். . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,227,487 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 15,063,975ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வீதவரியும் வரியும் | 10,777,000 | 11,611,507 | 12,335,139 | 6,156,320 | 10,700,000 | 11,951,860 | 8,429,144 | 6,874,552 |
| வாடகை | 36,096,000 | 35,675,467 | 34,481,551 | 860,427 | 38,729,000 | 29,003,597 | 31,208,785 | 1,551,806 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,285,000 | 1,534,728 | 1,379,728 | - | 2,223,000 | 1,503,965 | 1,452,216 | - |
| ஏனைய வருமானம் | 27,030,000 | 24,701,612 | 24,957,583 | - | 22,143,000 | 20,990,067 | 18,375,765 | - |
| | **76,188,000** | **73,523,314** | **73,154,001** | **7,016,747** | **73,795,000** | **63,449,489** | **59,465,910** | **8,426,358** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவைத் வீத வரிகள் மற்றும் வரிகள் ரூபா 6,156,320 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லையென்பதுடன் அகற்குரிய காலப் பகுப்பாய்வொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவையில் உள்ள மீதிகளை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் காணப்படுகின்ற வீத வரி வேலைத்திட்டத்தின் கீழ் காலப் பகுப்பாய்வொன்றை மேற்கொள்வதற்கு முடியாதென்பதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வாடகை வருமானங்கள் ரூபா 279,809 மீளாய்வாண்டிறுதியிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | உரிய நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் தொடர்பாக கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படாததால், அதன் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய வருமானத்தை இணங்காண முடியவில்லை. மேலும் ஒரு விளம்பர பலகைக்காக ரூபா 346,560 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தலைவரின் தீர்மானத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் கட்டணம் அறவீடு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் சபை இழந்த தொகை ரூபா 346,560.00 ஆகும் என. | வருடாந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நுழைவுச் சீட்டுகளின் பெறுமதியைப் பொருட்படுத்தாமல், 10 நாட்களுக்கான திருவிழாவொன்றினால் கேளிக்கை வரியாக ரூபா 500,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அத்துடன், விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டறங்கத்திற்காக அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க கட்டணம் அறவிடப்படாமையால் ரூபா 200,000 வான வருமானமொன்றும் இழக்கப்பட்டிருந்தது. | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படு கட்டணம் அறவிடப்பட்டதாக. | 2021 டிசம்பர் 03 திகதிய 2257 இலக்க வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

## 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| இரண்டு உறுப்பினர்கள் மற்றும் ஒரு பெண் உத்தியோகத்தரினால் உத்தியோகபூர்வமற்ற பயணங்களுக்காக ரூபா 42,576 தொகையான எரிபொருளை செலவு செய்யப்பட்டு சபையின் வேன் பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சபைக்கு சொந்தமான வாகனங்கள் தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தப்படாதென்பதாக. | உத்தியோகபூர்வமற்ற பயணங்களுக்காக அரச வாகனங்களை பயன்படுத்தக் கூடாது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | நகர சபை அலுவலகம், சபா ஆயுர்வேதம், வாசிகசாலை, பொது விளையாட்டு மைதானம் மற்றும் கேட்போர் கூடம் அமைந்துள்ள காணிகளின் உரிமை சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் சுவீகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களின் உரிமைகள் சுவீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமானது என ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 05 ஏக்கர் 35.44 பேர்ச்சஸ் காணிகள் பௌதீக ரீதியாக அடையாளம் காணப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. | தீர்வு எட்டப்படாத காணிகள் பௌதீக ரீதியாக அடையாளம் காணப்பட்டு தீர்வு காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களின் உரிமைகள் சுவீகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | விளையாட்டு மைதானத்திற்காக 2020 பெப்ரவரி 18ஆம் திகதி ரூபா 257,500க்கு கொள்வணவு செய்யப்பட்ட 50 மின்குமிழ்கள் மற்றும் 2019 மற்றும் 2020 ஆம் வருடங்களில் பெறப்பட்ட ரூபா 128,375 பெறுமதியான மின் உபகரணங்கள் இது வரை பயன்பாடற்று காணப்பட்டது. | ஏனைய உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியுமானதன் பின்னர் மின்குமிழை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | தேவைகளை கண்டறிந்த பிறகே பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 வாகனங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | கம்பெக்டர் ஒன்று மற்றும் ஒரு கலி தொட்டி 05 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இல்லாமல் உக்கிப்போய் காணப்பட்டிருந்தது. | கலி தொட்டி சிதைவடைந்த பொருட்களின் கீழ் அகற்றுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபைக்கு சொந்தமில்லாத 06 வாகனங்களின் உரிமைகள் உரித்தாக்குவதற்கு அல்லது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை உரிமையாக்குவது தொடர்பான ஆவணங்கள் பிரதான அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | 02/2017 இன் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **சிபார்சு** |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு 10 கிலோகிராம் மறை இறைச்சியை வைத்திருந்ததற்காகவும், 2022 இல் 2,250 லீற்றர் பிராந்திக்குக் கணக்குக் காட்டாததற்காகவும் நீதிமன்றத்தினால் ரூபா 125,000 அபராதமொன்று பலாங்கொடை விடுதிப் பராமரிப்பாளருக்கு விதிக்கப்பட்டிருந்தது. இணங்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி, சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டால் குத்தகையை பறிமுதல் செய்ய வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் நடைமுறைகளுக்கு முரணாக அந்த குத்தகைதாரருக்கே விடுதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | பொதுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், இதற்கு பிறகு ஒப்பந்த நிபந்தனைகளை மீறினால், விடுதி சபைக்கு உரித்தாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தலைவரின் விருப்பத்தின் பிரகாரம் 02 சட்டவிரோத கட்டிடங்களுக்காக திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தை வழங்கும் போது, சபை அறவிடப்பட வேண்டிய வருமானங்கள் ரூபா 886,301 வும் கைவிடப்பட்டிருந்தது. | விண்ணப்பதாரரின் கோரிக்கையை கருத்தில் கொண்டு பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நல்லெண்ண அடிப்படையில் கட்டிட திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு உரிய சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக. | கட்டிட திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் இணக்கச் சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவை தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |